முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 1094

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

27.09.2022, செவ்வாய்கிழமை

1. தர்மஞானியே அரங்கா போற்றி
தவபலம்கொண்ட தேசிகா போற்றி
பெருமைமிக்க பிரணவக்குடில் படைத்து
பேருலகை பிரணவ சக்திக்குள் கொண்டுவரும்
2. வருகின்ற குருராஜனே அரங்கனே போற்றிபோற்றி
வழங்குவேன் சுப்ரமணியர் யானும் இனிதே
(சுபகிருது வருடம் புரட்டாசி மாதம் 10ம் நாள், 27.09.2022 செவ்வாய்கிழமை)
ஆற்றல்பட ஞான அறிவுரை ஆசியை
அரங்கனுக்கு சுபகிருது நங்கை திங்களில் உரைப்பேன்
3. உரைக்கவே அரங்கனே கலியின் சிறந்த ஞானி
ஊழகற்றும் மாதவயோக ஞானியாகும்
வாகுடனே அரங்கன் திருவடி பற்றி
வணங்கிவந்தால் கூடும் வையகத்தில் மாற்றம் கூடும்
4. தருகின்ற குணத்தை உருவாக்கி
தயவைக்கொண்டு உலகை மாற்றுகின்ற தர்மஞானியாக வந்த அரங்கனே
அரங்கனே கலியுகத்தை மாற்றும்
ஆற்றல்மிக்க தவசியாகும்
5. வரம் தந்து அரங்கனுள் ஆறுமுகன் யான்
வல்லமைபட நித்தம் காத்து வருகின்றேன்
வருகவே அரங்கனை கண்டால் போதும்
வடிவேலன் என் காட்சி அவர்கட்கெல்லாம் உறுதியாகும்
6. பெருமைபட இந்த உலகமே மாற்றங்கண்டு
பேரிடர் துன்பம் பிற இன்னல் இல்லாத பாதுகாப்பு மிக்க ஞான பூமியாக
பழுதின்றி அரங்கன் அவதாரத்தால் இனிதே ஆற்றல்பட
பாதுகாப்பு மிக்க ஞான பூமியாக மாறும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–